

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 19.11.2025 அன்று திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டுக் கேடயங்கள், சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் 2892 பயனாளிகளுக்கு ரூபாய் 23.32 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், , மாநராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், , சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, க.பாண்டியன், தா.அரசு, திருமதி.மு.தனலட்சுமி, திருமதி.முத்தமிழ்ச்செல்வி, அறிவழகன், கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் மேட்டுப்பாளையம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படிக்கும் 172 மாணவிகளுக்கு மாதிரி வினாத்தாள் புத்தகங்களை கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா வழங்கினார். இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, வார்டு கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்த

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று கண்டன முழக்கம்!

மதுரை, நவ. 23 -

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்த ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் நேற்று முன்தினம் மதுரையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

சென்னையில் செயல்படுத்தப்படும் மெட்ரோ ரயில் சேவையை போன்று கோவை மற்றும் மதுரையிலும், மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருந்தது.

கடந்த 10 மாதங்களாக இந்த திட்ட அறிக்கைகள் மீது எந்த முடிவும் எடுக்காமல் கிடப்பில் போட்டிருந்த ஒன்றிய அரசு தற்போது, மக்கள் தொகையை காரணம் கூறி இந்த 2 திட்டங்களையும் நிராகரித்து திட்ட அறிக்கைகளை திருப்பி அனுப்பியுள்ளது.

அதேநேரம் கோவை, மதுரையைவிட குறைந்த அளவிலான மக்கள் தொகை கொண்ட ஆக்ரா, பாட்னா, போபால் நகரங்களின் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கையை கண்டித்து கோவையில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், இதன் தொடர்ச்சியாக ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் மதுரையில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை பழங்காநத்தம் ரவுண்டானாவில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி மற்றும் மு.மணிமாறன், மதுரை தி.மு.க. முன்னாள் மேயர் குழந்தை வேல், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

## “இளைஞர் எழுச்சி நாள்”

கழக அமைப்புச் செயலாளர் **ஆர்.எஸ். பாரதி**, அவர்கள் பங்கேற்கும்

## பொதுக்கூட்டங்கள்

| நாள் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 2025 நவம்பர் 22 | இராயபுரம் | சென்னை வடக்கு |
| ” ” 27 | புழல் | சென்னை வடகிழக்கு |
| ” ” 28 | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் | |
| ” ” 29 | விருத்தாசலம் | கடலூர் மேற்கு |
| 2025 டிசம்பர் 2 | கிணத்துக்கடவு | கோவை தெற்கு |
| ” ” 3 | திண்டுக்கல் மேற்கு மாவட்டம் | |
| ” ” 5 | சென்னை கிழக்கு மாவட்டம் | |
| ” ” 7 | திருநெல்வேலி மத்திய மாவட்டம் | |
| ” ” 8 | மதுரை தெற்கு மாவட்டம் | |
| ” ” 10 | சென்னை வடக்கு மாவட்டம் | |
| ” ” 14 | விராலிமலை | புதுக்கோட்டை வடக்கு |
| ” ” 18 | சென்னை வடக்கு மாவட்டம் | |

# உதகையில் SIR படிவங்கள் பூர்த்தி செய்யும் பணிகள்!

## அரசுக் கொறடா கா.ராமசந்திரன் நேரில் ஆய்வு!

*நீலகிரி, நவ. 23-*

*நீலகிரி மாவட்டம், உதகை காந்தல் பகுதியில் உள்ள 3 வாக்குச்சாவடிகளுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் வசதிக்காக காந்தல் பென்னட் மார்கெட் பகுதியில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், அப்பகுதி நகரமன்ற உறுப்பினருமான தம்பி இஸ்மாயில் ஏற்பாட்டில், SIR படிவங்கள் பூர்த்தி செய்வதற்கான சிறப்பு அரங்கு அமைத்து பணிகள் நடந்து வருகிறது.*

*இப்பணிகளை கழக தேர்தல் பணி செயலாளரும், அரசு கொறடாவுமான கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*உடன் மாவட்ட பொருளாளர் நாசர் அலி, உதகை மேற்கு நகர செயலாளர் ரமேஷ், மாவட்ட அமைப்பாளர் காந்தல் ரவி, பாக நிலை முகவர்கள் லுயிசா, பாரதிராஜா, அப்பாஸ், ரஞ்சித் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.*



கிருஷ்ணகிரி புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நகராட்சி மேல்நிலைப்பள்ளி மற்றும் புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மொத்தம் 1,350 மாணவ, மாணவியர்களுக்கு மொத்தம் ரூ.64 இலட்சத்து 81 ஆயிரத்து 580 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் வழங்கினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , கிருஷ்ணகிரி நகர செயலாளர்கள் அஸ்லாம் , வேல்மணி மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன் மற்றும் தலைமையாசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மாநகராட்சி, வார்டு 2, பெரிய குளத்துப்பாளையத்தில், புதிய நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

## நவம்பர் 23 (2012)



பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, 1955ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, 1956ஆம் ஆண்டு பூலாவரி கிளைக் கழகச் செயலாளராக, வட்டக் கழக பிரதிநிதியாக, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக, பின்னர் பொதுக்குழு உறுப்பினராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து 38 ஆண்டுகள் சேலம் மாவட்டக் கழகச் செயலாளராக தொய்வின்றி பணியாற்றி வந்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் – சட்டநகல் எரிப்புப் போராட்டம் ஆகியவற்றில் தலைமை ஏற்று சிறைவாசமும் – நெருக்கடிநிலை காலத்தில் ‘மிசா’ கைதியாக 14 மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

பூலாவரி ஊராட்சிமன்றத் தலைவர், கிராம கூட்டுறவு நாணய சங்கத் தலைவர், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், 1962 தொடங்கி ஆறு முறை சட்டப்பேரவை உறுப்பினர், சட்டமன்ற மேலவை உறுப்பினர், ஒரு முறை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், மூன்று முறை வேளாண்மைத் துறை அமைச்சர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

“சேலத்துச் சிங்கமாம், என்னுடைய தளபதி ஒருவரை இழந்த துக்கம் என்னை வாட்டி வதைக்கிறது. எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. அவ்வளவுதான் சொல்ல முடியும்!” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**